**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2019**

-----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படவேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயம் மறுதலிப்பதற்கான அடிப்படை பகுதிகளில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் பொருட்டு போதியளவிலும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளையும் பெற்றுக்கொள்வறத்கு எனக்கு இயலவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நடாத்தப்பட்ட கணக்காய்வின அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்காக அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையால் பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கலாக 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் கையகப்படுத்ததப்பட்டிருந்த ஹந்தான விடுமுறை விடுதிக்கு சொந்தமான 170.56 பர்சஸ் காணியின் பெறுமதி மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,520 என நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தாலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 27 மற்றும் 47 ஆம் பந்தியின் பிரகாரம் கொண்டுசெல்லும் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹந்தான விடுமுறை விடுதிக்கு சொந்தமான காணியை கையகப்படுத்ததப்பட்ட சந்தர்ப்பத்திலேயே பெயரளவு பெறுமதியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்து குறித்த பெறுமதியை பெற்றுத்தருமாறு குறித்த பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மதீப்பீடு வழங்கிய பின்னர் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அவ்வாறே நியமத்தின் 65ஆம் பந்தியின் பிரகாரம், “சொத்தொன்றின் கழிவுப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயட்காலத்தை கழித்து ஆண்டுதேறும் அறிக்கையிடும் காலப்பகுதி முடியும் தினத்தில் மீளாய்வு செய்து, முன்னர் மேற்கொண்ட | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் பௌதீக சொத்துக்களில் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்த குழுவினால் பரிந்துரைக்கப்பட்டால் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடுகளிலிருந்து வேபடுமாயின் இந்த வேறுபாடுகளை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம், கணக்கு வைக்கப்பட வேண்டும். அவ்வாறான போதிலும், 1985ஆம் ஆண்டு முதல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 251.72 மில்லியன் கிரயமுடைய பெறுமானத்தேய்வு செய்து நிறைவடைந்த 136 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு சீராக்கம் செய்யப்பட்டிராததுடன், தற்போது அவற்றுள் 98 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டவாறு உள்ளன. | குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறால்லாத காரணத்தால் மதிப்பீடுகளில் வேறுபாடொன்று காணப்படாத காரணத்தால் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படவில்லை. | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இருப்புகளின் பெறுமதிகளில் கிரயம் அல்லது தேறிய விற்பனைப் பெறுமதி ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், வணிக இருப்பில் உள்ள இருப்புக்களில் உள்ளடக்கப்பட்ட பார்க் ரோட்டில் அமைந்துள்ள 08 கடைகளில் நிகர கணிசமான பெறுமதி கணக்கிடப்படாமல் அதன் கிரயமான ரூபா 6.1 மில்லியன் ஆன பெறுமதி இருப்பின் பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, ரூபா 62.65 மில்லியன் நிகர விற்பனை பெறுமதி கணிப்பிடப்பட்டிருந்த 35 வீடமைப்பு மற்றும் கடைத் தொகுதியின்ட நிகர விற்பனைப் பெறுமதி கணிப்பிடப்பட்ட விதம் தொடர்பில் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பார்க் ரோட்டில் அமைந்துள்ள 08 கடைகளுக்குரிய கூட்டு ஆதன திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தற்போது மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த பெறுமதி கிடைத்த பின்னர் சரியாக புத்தகங்களில் கணக்கு வைக்க முடியும் என்பதுடன், அதுவரையிலும் கிரயம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்கு வைக்கப்பட வேண்டும். அவ்வாறே நிகர விற்பனை பெறுமதி கணிப்பிடப்பட்ட விதம் தொடர்பில் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 மற்றும் 2016ஆம் ஆண்டுகளின் போது வாகனங்களை கைத்தவிர்த்தல் தொடர்பில் கணக்கு வைக்கும் போது குறித்த பெறுமதிகள் குறைவாகவும் கூட்டியும் கணக்கு வைக்கும் தவறினை திருத்தும் போது, பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 1.41 மில்லியனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2014 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் வாகனங்களை கைத்தவிர்த்தல் தொடர்பில் கணக்கு வைக்கும் போது இடம்பெற்றுள்ள குறைவாக மற்றும் கூட்டிப் பதிவு செய்தல் 2019/12/31ஆந் திகதியில் திருத்தும் போது அந்த பெறுமதியை நிதி ரீதியாக ஏனைய பெறுமதிகளுடன் கவனத்திற்கொள்ளும் போது, பொருண்மையானதாக இல்லாதிருந்தமையால் தற்போதைய இலாபத்திறகு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த சீராக்கங்கள் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் காணிகளின் பெறுமதி ரூபா 55.3 மில்லியனாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், பரப்பளவு காண்பிக்கப்பட்டிராத அலுவலகம் மற்றும் வாடகை கட்டிடங்கள் அமைந்துள்ள 112 காணித் துண்டுகள் மற்றும் வீடமைப்பு திட்டங்களில் எஞ்சிய சுமார் 437.7 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குமாறு குறித்த பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்த பின்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்குரிய சொத்துக்கள் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கூட்டிணைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் மொத்த பங்கு மூலதனத்தின் 49.73 சதவீதம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி | நிதி நிறுவனமொன்றாக இலங்கை மத்திய வங்கியின் நேரடி கண்காணிப்புக்கு உட்படுகின்றமையால், அதிகாரச்சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ளமையால் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கம்பனியின் மொத்த பங்கு மூலதன்த்தில் 49.73 சதவீதம் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்டமையால், |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபைக்கு சொந்தமான போதிலும், அந்த கம்பனியை தொடர்புடைய கம்பனியொன்றாக கருதி கணக்குகளை தயாரிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திராததுடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட ஓஷன்வீவ் டிவளப்மன்ட் கம்பனியின் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே மாதம் வரையிலும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிராமையால் அந்த கம்பனியை கணக்காய்விற்கு உட்படுத்தாத நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | நீண்ட கால முதலீடாக கருதி கணக்கு வைக்கப்பட்டது.<br><br>துணைக் கம்பனியொன்றாக கருத்தி ஒருங்கிணைத்தல் தொடர்பில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட ஓஷன்வீவ் டிவளப்மன்ட் கம்பனியின் 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | அந்த கம்பனியை தொடர்புடைய கம்பனியொன்றாக கருதி கணக்குகளை தயாரிக்க வேண்டியதுடன், துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் மீதிகள் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்க பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையினால் தமது துணைக் கம்பனியில் ரூபா 120 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2013ஆம் ஆண்டின் பின்னர் அதிகாரசபைக்கு எதுவித பங்கிலாபமும் கிடைத்திருக்கவில்லைஇ 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும், துணைக் கம்பனியால் ரூபா 615 மில்லியன் பங்கிலாபம் ஈட்டப்பட்டிருந்தது. | அனைத்து வருடங்களிலும் பங்கிலாபம் கோரப்பட்டுள்ளது. மேலும், முஏனுஊ நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய பங்கிலாபம் தொடர்பில் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், அதன் போது தீர்மானிக்கப்பட்டவாறு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்காக எமது அமைச்சின் செயலாளருக்கு 2020.07.17ஆந் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், குறித்த அறிவுரைகள் கிடைத்த பின்னர் மேற்படி பணிகள் முன்னெடுக்கப்படும். | துணைக் கம்பனியின் நிர்வாகம் மற்றும் பங்கிலாப கொள்கை தொடர்பில் அதிகாரசபை ஆக்கபூர்வமான முறையில் தலையிட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | முன்வைக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | | | |
| (அ) | வெளிநாட்டு மானியம் | 131.68 | விரிவான பட்டோலைகள் | 2020 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் மீதிகளுக்குரிய சான்றுபடுத்தல்கள் மற்றும் விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டு மானியங்கள் | 637.33 | விரிவான பட்டோலைகள் | விரிவான தகல்களை திரட்டி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் மீதிகளுக்குரிய சான்றுபடுத்தல்கள் மற்றும் விரிவான பட்டோலைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| (இ) | ஏனைய மானியங்கள் | 27.19 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | முதலீடுகள் | 978.53 | விரிவான தகவல்கள் | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | ஏனைய நிறுவனங்களி லிருந்து கிடைத்த மானியங்கள் | 572.24 | விரிவான அறிக்கைகள் | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 41.5 | விரிவான அறிக்கைகள் | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | பெற வேண்டிய வாடகை மற்றும் | 177.24 | விரிவான அறிக்கைகள | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | குத்தகை கட்டிடங்கள் | 35.18 | கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் | - மேற்படி - | - மேற்படி - |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பெற வேண்டிய மொத்த கடன்பட்டோர் மீதி (ஐயக்கடன் ஒதுக்கீட்டுக்கு முன்னர்) ரூபா 5,762.62 மில்லியன் ஆகும். அந்த கடன் மீதியினுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,881.9 மில்லியனாக காணப்பட்டதுடன், அது மொத்தப் பெறுமதியில் 50 சதவீதமானதாகும். | கடன் பிரிவு மற்றும் காலாவதியான கடன் மீதியாக 2 பிரிவுகள் மாவட்ட அலுவலகங்களில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், காலாவதியான பிரிவு சட்ட உத்தியோகத்தர்களின் கீழ் உரிய அறவிடல்கள் மிகவும் கிரமமான முறையில் மறறும் ஆக்கபூர்வமாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெற வேண்டிய மீதிகளை ஆக்கபூர்வமாக அறவீடு செய்யும் நடைமுறை ஆக்கபூர்வமானதாக முன்னெடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அறிவித்தல்களை பிரசுரிப்பதற்ாக ஊடகப் பிரிவிற்கு பெற வேண்டியரூபா 67.83 மில்லியனுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைப் பணம் ரூபா 12.32 மில்லியன் ஆகும். அவ்வாறே, அதிகாரசபையின் அறிவித்தல்களை பிரசுரிப்பதற்காக செவண ஊடகப் பிரிவிற்கு கிடைக்க வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 44.61 மில்லியனுள் உள்ளடங்கியுள்ளதுடன், அவற்றுள் ரூபா 42.61 மில்லியன் 2019ஆம் ஆண்டின் போது ஊடக பணிகளுக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | மேற்படி தொகையில் ரூபா 441,388,080 தொகை 2020ஆம் ஆண்டின் போது தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினாலும், ஏனைய நிறுவனங்களிலிருந்து ரூபா 17,023,858.00 தொகையும் கிடைத்துள்ளது. ஊடக நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 3,464,134.80 தொகை 2020ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வெளிவாரித் தரப்பினரால் காணி மற்றும் வீடுகளை சுவீகரித்தல், வீடுகளை நிர்மாணித்தல், மிகையூதிய கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகள் காரணமாக ரூபா 3,618.09 மில்லியன் நட்டஈடு கோரி அதிகாரசபைக்கு எதிராக 10 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அதிகாரசபையின் வழக்கு பணிகளை துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழக்குகள் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதுடன், நட்டஈட்டுத் தொகை தீர்மாணிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 05 ஆகும். அதிகாரசபையால் வெளிவாரித் தரப்பினருக்கு எதிராக 901 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக அதிகாரசபைக்கு ரூபா 105.93 மில்லயன் பெற வேண்டியதாக காணப்பட்டது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அதிகாரசபையின் பதவியணியிலிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 153.3 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அறவிடப்படாதுள்ள மீதி ரூபா 5.9 மில்லியன் ஆன போதிலும், அந்த ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பிரிவு / மாவட்ட அலுவலகத்திற்கு அறிவித்து துரிதமாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய பணத்தை உரிய முறையில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 முற்பணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகாரசபையினால் வெளிவாரித் தரப்பினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பதவியணிக்கு வழங்கிய முற்பணங்கள், வைப்புக்கள், பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,299.89 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் உள்ளடங்கியுள்ள 03 வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் வெளிவாரித் தரப்பினரிடமிருந்து தீர்ப்பனவு செய்ய வேண்டிய முற்பண மீதி முறையே ரூபா 205.47 மில்லியன் மற்றும் ரூபா 64.29 மில்லியனான போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் அந்த மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | **ஒப்பந்த முற்பணம்,**<br><br>ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்காக முன்வைக்கப்படும் பட்டியல்களின் பிரகாரம் அந்த ஒப்பந்தத்தின் பணிகள் நடைபெற்றுவரும் 30% முதல் 90% வரையான காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்யப்படும்.<br><br>**நானாவித முற்பணங்கள்,**<br><br>இந்த முற்பணங்கள் நேரடியான நிர்மாணங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்டுள்ள முற்பணம் ஆகும். குறித்த பணிநிறைவு | வெளிவாரித் தரப்பனருக்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் பதவியணிக்கு வழங்கிய முற்பணங்கள், வைப்புக்கள், பெற வேண்டிய மீதிகளை உரிய முறையில் தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

செய்யப்பட்ட மட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும் பட்டியல்களிலிருந்து குறித்த முற்பணம் கழிக்கப்படும்.

**வழங்கல் முற்பணங்கள்**

மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்குரிய ரூபா 84,420 மற்றும் களஞ்சிய பிரிவின் முற்பணம் ரூபா 200,000 ஆகும். மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்கு உரிய முற்பணங்கள் தற்போது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 11 (பீ) உறுப்புரை மற்றும் 2003 ஜுன் 02 திகதிய PED/12 இலக்க பொது வியாபார சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி | ரூபா 1,514.6 மில்லியன கூட்டுத்தொகையான குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீடுகள் தொடர்பாக நிதி அமைச்சரிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. | இதற்காக அமைச்சின் ஊடாக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தொடர்புடைய அனுமதியின் அடிப்படையில் முதலீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XLVIII ஆவது உறுப்புரையில் 13:2 மற்றும் 22:1:1ஆம் பந்திகளின் திருத்தங்கள் மற்றும் 2019 செப்தம்பர் 30ஆந் திகதிய 30/2019 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை I மற்றும் II ஆம் பந்தி. | ஆரம்ப விசாரணையொன்றினை 02 மாதங்களிலும் குற்றப்பத்திரமொன்றுடன் ஒழுக்காற்று விசாரணையொன்று 06 மாதங்களிலும் நிறைவு செய்ய வேண்டியதுடன், அதிகாரசபையில் காணப்பட்ட 06 முதல் 56 மாதங்களுக்கு உட்பட்ட காலம் கடந்த ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் 14 மற்றும் விசாரணைக் காலத்தை கண்டறிய முடியாத 13 விசாரணைப் பணிகளும் நீதிமன்றங்களில் வழக்கு பணிகள் நிறைவடையாத 03 விசாரணைகளும் 2020 யூன் | பதில் வழங்கப்படவில்லை. | குறிப்பிடப்பட்ட சட்ட திட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 30ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், குற்றப்பத்திரமொன்றை வழங்குவதற்று ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த மற்றும் அந்த குற்றப்பத்திரத்தை திருத்துவதற்க மேலும் ஒரு வருட காலம் கடந்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | |
| (இ) | தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 3.1ஆம் பந்தி | மீளாய்வாண்டினுள் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபையில் சேவையாற்றிய பொறியியளாலர் ஒருவர் மற்றும் கட்டிடக்கலைஞருக்காக 12 நாட்கள் கொண்ட வெளிநாட்டு பயிற்சியொன்று வழங்கப்பட்டிருந்தது. | குறித்த பயிற்சிக்கு பங்குபற்றச்செய்வதற்கு உததேசிக்கப்பட்டுள்ள 09 பேரின் பெயர்கள் 2019/04/29 ஆந் திகதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. அந்த பெயர்களிடையே ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய பொறியியளாலர் ஒருவர் மற்றும் கட்டிடக்கலைஞர் உள்ளடங்களாக மேலும் இருவரின் பெயர்கள் உள்ளடங்கியிருந்தன. அவர்களை அதற்காக பங்குபற்றச்செய்வதற்காக தலைவரின் மற்றும் பொது முகாமையாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1589/30 மற்றும் 2009 பெப்ரவரி 20ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் 90ஆம் பந்தி | அதிகாரசபையின் புதிய நியமனங்களை வழங்குதல், பதவிகளை பொறுப்பேற்றல் தொடர்பிழலான தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பதவிகளுக்காக புதிய நியமனங்களை வழங்கும் போது நியமனக் கடிதங்களின் பிரதியொன்று அரச கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிவிசேட வர்த்தமானியின் நியமங்களுக்கமைய உரிய தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------ | | | |
| (i) | நிதிப் பிரமாணம் இலக்கம் 169(2) மற்றும் 188(2) | அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்கள் 10 இன் 13 கணக்குகள் 01 மாதம் முதல் 02 வருடங்கள் கடந்து வைப்புச்செய்யப்பட்டிருந்த போதிலும், தீர்வையாகாத காசோலைகளின் எண்ணிக்கை 234 ஆக காணப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா 9.98 மில்லியன் ஆகும். | பின்னிணைப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வங்கிக் கணக்கு மற்றும் காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி. 371(2) மற்றும் 2015 யூலை 14ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 இன் “ஆ” பந்தி | ஏதேனுமொரு விசேட பணியொன்றிற்காக பதவிநிலைத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும், 04 மாவட்டங்களில் பதவிநிலையற்ற 36 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1.6 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 இனை மிகைத்து ரூபா 1.16 மில்லியன் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | முற்பணம் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் 2020/15ஆம் இலக்க அலுவலக கட்டளை 2020-10-22 வெளியிடப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 371(5) மற்றும் மேற்படி சுற்றறிக்கையின் “ஈ” பந்தி | உப கட்டுநிதி குறித்த பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 74 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3.67 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு 01 மாதம் முதல் 03 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தது. | முற்பணம் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் 2020/15ஆம் இலக்க அலுவலக கட்டளை 2020-10-22 வெளியிடப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iv) | நி.பி 396 | அதிகாரசபைக்கு சொந்தமான 25 வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்ட போதிலும், கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 140 காசோலைகள் மற்றும் 01 வருடத்திற்க மேற்பட்ட 28 காசோலைகளும் தொடர்பில் குறித்த பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டிராததுடன், அதன் பெறுமதி முறையே ரூபா 4.89 மில்லியன் மற்றும் ரூபா 667,455 ஆகும். | தொடர்புடைய விபரங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2009 செப்தெம்பர் 01 திகதிய DMA/2009 (2) ஆம் இலக்க முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை | அதிகார சபையின் நிலையான சொத்து பதிவேடுஇற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. கணனி உப பாகங்கள் பதிவேடு கணனிப் பிரிவினால் பேணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிலையான சொத்து பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1 உறுப்புரை. | அதிகார சபையினால் 03 வருடங்களுக்காக பிரதான பெறுகை திட்டமொன்று மற்றும் விரிவான பெறுகை திட்டமொன்று நாளதுவரையாக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைகள் திட்டம் இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | பெறுகைகள் திட்டத்தினை நாளதுவரையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2003 ஜூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது வியாபார சுற்றறிக்கை<br>--------------------------------- | | | |
| (i) | 9.4 ஆவது பந்தி | அமைச்சரவை அனுமதி இல்லாது அமைச்சுக்கள் மற்றும் வேறு அரச நிறுவனங்களுக்கு 39 ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக மீளாய்வாண்டினுள் ரூபா 14.84 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | வரிசை அமைச்சு, வீட்டுக் கூலி மீளாய்வுச் சபை மற்றும் வீடமைப்பு ஆணையாளர் அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து பதவியணியினருக்கும் செவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடமைகள் நிறைவேற்றப்படுகின்றமையால் அந்த பதவியணியின் சம்பளங்கள் மற்றும் படிகள் மீளளிப்பு செய்யப்படாததுடன், வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை மீளளிப்பு செய்யப்படும். | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் ஊழியர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கும் கொடுப்பனவு மேற்கொள்ளவும் வேண்டும். |
| (ii) | 9.5.1 ஆம் பந்தி | அதிகாரசபையினால் மீளாய்வாண்டினுள் ரூபா 1.19 மில்லியன் பயிற்சி மற்றும் புலமைப்பரிசில் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பயிற்சி பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக்கவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஏ) | 2013 சனவரி 15ஆந் திகதி 1/2013ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2018 திசெம்பர் 19ஆந் திகதிய வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் 2/1/176/23ஆம் இலக்க கடிதம் | அதிகாரசபையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் மற்றும் 44 ஊழியர்களுக்கு 2017, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளின் போது 0 வருடத்தினை விஞ்சி நீண்டகால, சேவை உடன்படிக்கை மற்றும் ஒப்பந்த அடிப்படைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றுள் 41 | 2019.10.29 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சில பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களின் சேவையானது 2019.12.31ஆந் திகதி நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறே 60 வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியின் சேவையானது 2019.11.19ஆந் திகதி கடிதத்தின் மூலம் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கை விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 2019ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 28.64 மில்லியன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | 1997 செப்தம்பர் 24ஆந் திகதிய 04/97/06 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 2.4ஆம் பந்தி | பெற்றுக்கொண்ட முற்பணங்களை காசாக தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் மீள வழங்கப்படக்கூடாத போதிலும், தெரிவுப் பரிசோதனையின் போது 02 மாவட்ட அலுவலகங்களில் 08 சந்தர்ப்பங்களில் முன்னர் பெற்றுக்கொண்ட முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் ரூபா 718,000 கூட்டுத்தொகை மீள வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரே உத்தியோகத்தருக்கு ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட | முற்பணங்களை வழங்கும் போது மற்றும் தீர்ப்பனவு செய்யும் போது அலுவலக கட்டளைகளின் பிரகாரம் செயற்படுமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், முற்பணம் தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் 2020/15ஆம் இலக்க அலுவலக கட்டளை 2020-10-22 வெளியிடப்பட்டுள்ளது. | வெளியிடப்பட்டுள்ள உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் மற்றும் அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகளிலான பற்றாக்குறை முறையே ரூபா 3,019 மில்லியன் மற்றும் ரூபா 3,025 மில்லியனாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை முறையே ரூபா 909.9 மில்லியன் மற்றும் ரூபா 999.3 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தொகுதியின் மற்றும் அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு முறையே ரூபா 2,109.1 மில்லியன் மற்றும் ரூபா 2,025.7 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வீடு விற்பனை வருமானம் ரூபா 52.4 மில்லியனால் அல்லது 94 சதவீதத்தினால் குறைவடைந்தமை, வட்டி வருமானம் ரூபா 4.63 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் பதவியணி செலவினம், அச்சீட்டு செலவினம், பெயர்ப்பலகை செலவினம், தகவல் மற்றும் போக்குவரத்து செலவினம், மாதிரிக் கிராமங்களுக்காக மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகளக்கான செலவினம் மற்றும் நட்டஈடு ஒதுக்கம் (சட்டம்) ஆகியவற்றுக்கான செலவினம் ரூபா 2,036 மில்லியனால் அதிகரித்தமை இந்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது, அதிகாரசபையின் நிதி விளைவுகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டின் போது காணி விற்பனை வருமானம் அதிகரித்தமையால் அந்த வருடத்தின் மிகையானது ரூபா 240.3 மில்லியனாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், உழியர் பணிக்கொடை, அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் ஆகியவற்றுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கருத்திற்கொள்ளும் போது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அதிகாரசபையின் பங்களிப்பு ரூபா 290.98 மில்லியன் மறைப் பெறுமதியாக காணப்பட்டது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 1.36:1 மற்றும் விரைவு விகிதம் 1.35:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அது முறையே 1.61:1 மற்றும் 1.59:1 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையினால் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 13,387 மில்லியன் செலவில் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் கடன் மற்றும் உதவிகளாக புதிய 26 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,389 மில்லியனான 04 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாலிகாவத்த செயற்திட்டம், தங்கல்ல வீடமைப்பு செயற்திட்டம், மத்தியத்தர பிரிவு வீடமைப்பு செயற்திட்டம் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை வழங்குதல், (மலசலகூட வசதிகள்) ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 4,389 மில்லியனான நிதியேற்பாடு கிடைக்காமையால் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | அதிகாரசபையால் திட்டமிடப்படும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதியேற்பாடு இல்லாது செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த திட்டமிடக்கூடாது. |
| (ஆ) | ஆரம்பிக்கப்பட்ட 09 செயற்திட்டங்களின 17,550 வீட்டு அலகுகளுக்காக கடன் மற்றும் உதவிகளை வழங்கி வீடுகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்ட போதிலும், பூர்த்தி செய்வதன் செயன்முன்னேற்றம் 01 முதல் 33 சதவீதம் வரையிலும் பரவலடைந்திருந்தது. அவ்வாறான போதிலும், திட்டமிட்ட செலவினத்தில் 89 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. | சில நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக இலக்குகள் மற்றும் செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்யும் போது மற்றும் குறிப்பிடும் போது சிக்கலான சந்தர்ப்பங்கள் உருவாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பௌதீக இலக்குகள் மற்றும் செயன்முன்னேற்றத்தினை குறிப்பிடுவதிலுள்ள அசௌகரியம் காரணமாக பௌதீக இலக்குகள் மற்றும் செயன்முன்னேற்றம் குறிப்பிடப்படவில்லை. | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மாதிரிக் கிராமங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்படும் கடன் பணத்தில் முதல் தவணை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய எழுத்துமூல உடன்படிக்கைகளின் பிரகாரம், தணைப் பணம் உரிய முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கி 06 மாதங்கள் கடந்து போதல் அல்லது இறுதி தவணையை வழங்கிய பின்னர் வரும் அதற்கடுத்த மாதம் ஆகிய இரு விடயங்களில் முதலாவது ஏற்படும் சந்தர்ப்பத்திலிருந்து பணம் அறவிடல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 25.3 மில்லியனான கடனை வழங்கிய 66 நலனாளிகளிடமிருந்து ஒரு தவணையேனும் மீள அறவிடப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. அத்துடன், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், 05 மாவட்டங்களின் 50 மாவட்டங்களின் 1,460 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 493.77 மில்லியனான மொத்த கடன் தொகையில் 03 தவணைகளுக்கு மேற்பட்ட நிலுவை கடன் அளவானது ரூபா 39.39 மில்லியன் ஆகும். | | தொடர்ச்சியாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2019ஆம் ஆண்டின் போது ஹொரண, வெலிஓய (விசேட) மற்றும் தெற்கு மற்றும் வடக்கு மாகாண இந்திய உதவி வீடமைப்பு செயற்திட்டங்களில் ரூபா 688 மில்லியன் கடன் மற்றும் உதவிகளின் மூலம் 1,486 வீட்டு அலகுகளின் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும், ஒரு வீட்டினையேனும் நிர்மாணிக்க இயலாதிருந்தது. அதற்காக ரூபா 126 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சம்பத் செவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2,000 வீட்டு அலகுகளை | ஹொரண மற்றும் வெலிஓய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் பின்னர் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டமை மற்றும் நலனாளிகளை தெரிவு செய்வதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் உரிய காணித் துண்டுகளை தீர்ப்பனவு செய்வதற்காக ஆண்டின் பெரும் பகுதி எடுக்கப்பட்டமையும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், இந்திய உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கான நலனாளிகளை தெரிவு செய்தல், பொருத்தமான | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிப்பதற்கு மற்றும் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 356 வீட்டு அலகுகள் மாத்திரம் ஆரம்பிப்பதற்கான கடன் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 64 வீட்டு அலகுகளின் பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. | காணிகளை தெரிவு செய்தல் போன்ற பணிகளுக்காக அதிக காலம் எடுத்தமை, வீடுகளில் அந்தந்த நிர்மாண மட்டங்கள் அடையப்பட்ட பின்னர் இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் நிதியினை விடுவிப்பதற்கு அதிக காலம் எடுத்தமை. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது 03 செயற்திட்டங்களின் பணிகள் ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்ட வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை 24,692 ஆன போதிலும், மதிப்பிடப்பட்ட அளவினை விஞ்சி 16,698 வீட்டு அலகுகளுக்காக கடன் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்தமையால் பணிகளை முடிவுறுத்துவதற்கு இறுதி கடன் மற்றும் உதவிக் கட்டங்கள் வழங்குவதற்கு இயலுமானதாக இருந்தது 3,355 அலகுகள் மாத்திரமே. அவ்வாறே ரூபா 2,260 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 3,073 மில்லியன் அந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | குறைந்த வருமானம் பெறும் அதிகளவு எண்ணிக்கையிலான குடும்பங்கள் முன்வந்தமையால் இலக்கிடப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை விஞ்சி அதிகளவு எண்ணிக்கையிலான குடும்பங்களுக்கு நலன்களை வழங்க நேர்ந்தது. அவ்வாறே, விரு சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரணவிரு அதிகாரசபையினால் மேம்படுத்தும் தேவைப்பாடுடைய அதிக எண்ணிக்கையான நலனாளிகள் ஈடுபடுத்தப்பட்டமையால் இலக்கினை விஞ்சி நலன்கள் வழங்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடுகளை பெற்றுக்கொள்ள வீடுகளை இழந்த அதிக எண்ணிக்கையிலான குடும்பங்கள் முன்வந்திருந்தன. | கடன் தொகை வழங்கும் போது அதிகாரசபையின் நிதிஅ நிலைமைக்கமைய மற்றும் திட்டங்களின் பிரகாரம் செயற்படுதல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (எ) | வீடமைப்பு செயற்திட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 10 பாலங்களை நிர்மாணிப்பதற்கு மற்றும் சமூக நீர் செயற்திட்ட பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில், ரூபா 120 | சில செயற்திட்டங்களில் அதிக அளவில் மேற்கொள்வதால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினை விஞ்சி பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்ய நேர்கின்றமையால் ஒட்டுமொத்தமாக | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் கூட்டுத்தொகை ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அதன் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 39 சதவீதம் மற்றும் 24 சதவீதமாக காணப்பட்ட போதிலும், ஆண்டின் இறுதியில் நிதியேற்பாடுகளை விஞ்சி ரூபா 43 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயன்முன்னேற்றத்தில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், வேலையின் அளவின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஏ) | வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இணைந்த காணிகள் மற்றும் வெற்றுக் காணிகளிக் அளவீட்டு பணிகள் மற்றும் மதிப்பீட்டு பணிகளை செயற்திறனாகவும் முறையாகவும் மேற்கொண்டு அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளை உரிய முறையில் இனங்கண்டு அந்த காணிகளை ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு முடியாதிருப்பதனால், அதிகாரசபைக்கு ஈட்டக்கூடிய வருமானத்தை ஈட்ட முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அதிகாரசபைக்கு சொந்தமான வீடமைப்பு திட்டங்களுடன் இணைந்ததாக மற்றும் வெற்றுக் காணிகளிக் அளவீட்டு பணிகள் மற்றும் மதிப்பீட்டு பணிகளை மேற்கொண்டு அந்த பெறுமதியை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 1979 இன் 17ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 9ஆம் பிரிவிற்கமையாத வகையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் ஒரே நபருக்கு மத்தேகொட மற்றும் மெனிங்டவுன் வீடமைப்பு திட்டங்களில் இரு வீடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 9855 (4/2020) ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அவரின் கோரிக்கையின் அடிப்படையில் முதலில் வழங்கப்பட்ட வீட்டினை மீள பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2020 யூன் 30ஆந் திகதி வரையிலும் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஒ) 80/90 தசாப்பத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் குத்தகை அடிப்படையில் வழங்கிய 12 கிராமங்களுக்குரிய சுமார் 60.59 ஹெக்டேயர் பரப்பளவான ஜனஉதான காணித் துண்டுகள் 413 இன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 13.48 மில்லியனாக காணப்பட்டதுடன், இந்த பணத்தை அறவிட்டு அந்த காணிகளை நலனாளிகளுக்கு கையளித்தல் இதுவரையிலும் இடம்பெற்றிராததுடன், அந்த தசாப்பத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் 03 ஜனஉதான கிராமங்களின் 7.459 ஹெக்டேயர் பரப்பளவான 44 காணித்துண்டுகள் மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதியை இனங்காண அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பணத்தை அறவிட்டு காணிகளை சுவீகரிக்கும் பணிகள் முறையாக இடம்பெற வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகாரசபைக்கு கிடைக்கும் ஏனைய நிதியங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 612.5 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 82.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், ஒரு செயற்திட்டத்திற்காக எதுவித செலவினம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, ஏனைய நிதியங்களின் மூலம் செலவினம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்படாத சொந்துரு பியச நிகழ்ச்சித்திட்டத்திற்காக அந்த நிதியத்திலிருந்து ரூபா 999.8 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. | வெளிவாரி நிதியங்களை மதிப்பீடு செய்யும் போது சொந்துரு பியச வங்கிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி நலனாளிகளுக்கு நேரடியாக வங்கியிலிருந்து செலுத்தப்படுகின்றமையால் , எமது செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறான போதிலும், மாவட்ட அலுவலகங்களின் ஊடாக நலன்களை வழங்கிய குடும்பங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் மற்றும் நிதி செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டதன் பிரகாரம் செயன்முன்னேற்றம் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டமையால் மதிப்பீட்டினை விஞ்சி | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் முறையாகவும், உரிய முறையில் திட்டமிட்டும் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கைகளில் காணக்கூடியதாக உள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகாரசபையினால் 145 கூட்டு ஆதனங்களில் 4,054 வீட்டு அலகுகளுக்காக உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் உள்ள 81 ஆதனங்களின் 1,913 அலகுகளின் காணிகளை அதிகாரசபைக்கு சுவீகரிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபைக்கு ஆதனங்களை சுவீகரித்திருந்த போதிலும், கூட்டு ஆதன வரைபடங்கள் தயாரிக்கப்படாமை, கூட்டு ஆதன கூற்று தயாரிக்கப்பாமை, மற்றும் அந்த கூற்றினை பதிவு செய்யாமை போன்ற விடயங்களின் காரணமாக 63 கூட்டு ஆதனங்களின் 1,821 அலகுகளுக்காக உரித்துறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 02 ஆதனங்களின் 272 அலகுகளுக்காக கூட்டு ஆதன கூற்றுக்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரித்துறுதிகள் வழங்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டினுள் வாடகை ஊறுதி முறைமையின் கீழ் வழங்கப்பட்ட 3,000 நலனாளழகளுக்கும் உரித்துறுதிகளை வழங்க தீர்மானித்திருந்த போதிலும், 64 குத்தகை உரித்துறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | 66 உத்தேச வீடமைப்பு முறைமைகளின் 145 கூட்டு ஆதனங்களினுள் அமைந்துள்ள 4,054 வீட்டு அலகுகளுக்காக கூட்டு ஆதன வரைபடங்கள் பதிவு செய்யப்பட்டிராததுடன், அந்த கூட்டு ஆதனங்களுக்காக சட்டத்தினை பதிலீடாக கொள்ள முடியும். | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் முறையாகவும், உரிய முறையில் திட்டமிட்டும் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட மாதிரிக் கிராமங்கள் தொடர்பிலான பின்தொடர் அறிக்கை (2019 | மாதிரிக் கிராமங்கள் வீடமைப்பு செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கு பல்வேறு | மாதிரிக் கிராமங்களை தெரிவு செய்யும் பணிகள் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர்) பிரகாரம், 10,117 நலனாளிகளில் 805 பேர் காட்டு யானை பிரச்சினைகள், பொது வசதிகள் இல்லாதிருந்தமை, மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் குடியேறியிராததுடன், மற்றுமொரு வீடொன்று காணப்பட்டமை மற்றும் மாதிரி கிராமங்களில் வீடுகளை விற்பனை செய்தமையின் அடிப்படையில் 183 நலனாளிகள் குறித்த வீடுகளில் குடியேறியிராத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | காணிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (அதாவது அரசிற்கு சொந்தமான LRC வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளாகும்) இந்த அரச காணிகள் வழங்கப்படுவது பிரதேச செயலாளரால் காணிக் கச்சேரிகளை நடாத்தி நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் ஆகும். இதன் போது சில நலனாளிகளால் வழங்கப்பட்ட போலியான தகவலின் அடிப்படையில் சில சந்தர்ப்பங்களில் வேறு காணிகளுக்கு உரித்துடைய நபர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br><br>மக்களின் உரித்துக்கு கையளிக்கப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள நலனாளிகள் சட்டத்திற்கு முரணான வகையில் வீடுகளை விற்பனை செய்துள்ளனர். | நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2015 நவம்பர் முதல் 2019 திசெம்பர்ய வரையிலும் மாதிரிக் கிராமங்களுக்காக அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறத்தல் விழாக்களின் போது விளம்பர நடவடிக்கைகளுக்காக பத்திரிக்கையில் பிரசுரிப்பதற்காக தலைமை அலுவலகத்தினால் ரூபா 461.71 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த செலவினங்களுக்கு மேலதிகமாக மாதிரிக் கிராமங்களின் திறப்பு விழாவிற்கு மேலும் ரூபா 353.64 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. | நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்கள் அந்தந்த காலங்களில் பதவி வகித்த அமைச்சர்களின் அறிவுரைக்கமைய திறப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பணிப்பாளர் சபியின் அங்கீகாரத்துடன் குறித்த செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. | அதிகாரசபையின் நிதி ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே, கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் 05 மாவட்ட அலுவலகங்களில் அடிக்கல் நாட்டுதல், கிராமங்களின் திறப்புவிழாக்கள் மற்றும் கல்வெட்டுக்களை பதிப்பதற்காக 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 20.51 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பஹா, கொழும்பு, காலி, மாத்தறை, புத்தளம், கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் வெற்றுக் காணிகளில் குடியேறியுள்ள அத்துமீறிய குடியிறுப்பாளர்கள் 121 பேரிடமிருந்து அறவிடுவதற்குள்ள மொத்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 43.55 மில்லியனாக காணப்பட்டதுடன், குறைந்த வருமானமல்லாத 25 அத்துமீறிய குடியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடுவதற்குள்ள மொத்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 25.85 மில்லியனும் காணப்பட்டது. அவ்வாறான போதிலுமட, அதிகாரசபையினால் அந்த அத்துமீறிய குடியிறுப்பாளர்களை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய குடியிறுப்பாளர்களை சட்டரீதியாக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அத்துமீறிய குடியிறுப்பாளர்களை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 1999 செப்தம்பர் 11ஆந் திகதிய 99/1165/21/122ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அத்துமீறிய குடியிறுப்பாளர்களை சட்டரீதியாக்கும் போது தற்போதைய மதிப்பீடு அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளை அடிப்படையாக கொண்டு அதிகாரசபைக்கு சொந்தமான வீடுகள், காணிகள் மற்றும் கடைகள் அத்துமீறிய குடியிறுப்பாளர்களுக்கு அவர்கள் குடியேறிய வருடத்தின் மதிப்பீட்டு பெறுமதிக்கு கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2016.12.23 ஆந் திகதி 08/2016ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 1998 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 257,500/- இனை அறவிட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2000ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு பெறுமதிக்கு 5% சொத்தின் அதிகரிப்பொன்று தற்போது வரையிலும் சேர்க்கப்பட்டு 15% நிர்வாக கட்டணமொன்று மற்றும் அதற்குரிய வரித் தொகையுடன் அறவிட்டு சட்டரீதியாக்குவதற்கு பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் இலக்கம் 8505 இன் ஊடாக அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிராகரம், இருவர் முழுப் பணத்தையும் செலுத்தியுள்ளதுடன், ஒருவர் தவணை முறையில் பணத்தை செலுத்தியவாறு உள்ளார்.<br><br>சனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கமைய இந்த அதிகாரசபையின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சொத்துக்கள் அகற்றப்பட்டுள்ளன. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் அத்துமீறிய குடியிறுப்பாளர்களை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களின் மூலதன பணிகளிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கமைய மாவட்ட அலுவலகங்களுக்கு போதியளவான நிதி கிடைக்காமை மற்றும் பெற்றுக்கொண்ட கட்டங்களுக்குரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிராமை போன்றவற்றின் அடிப்படையில் குருநாகல், மொணராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட முறையே 86, 56 மற்றும் 10 மாதிரிக் கிராமங்களின் நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, சுமார் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அடிக்கல் மாத்திரம் நடப்பட்டிருந்த 11 மாதிரிக் கிராமங்கள் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | இந்த மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது, ஆரம்பிக்கப்பட்ட 2562 கிராமங்களுக்குமான முழுமையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2019ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கிராமங்களுக்க நிதி போதிய அளவில் கிடைக்காமையால் நிர்மாணங்கள் மந்தமான நிலையிலும் இடைநடுவில் நிறுத்தப்பட்டும் காணப்பட்டன. | அதிகாரசபையின் செயற்பாட்டு பணிகள் மிகவும் திட்டவட்டமான முறையில் காணப்படும் நிதிக்கமைய நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003ஆம் ஆண்டின் போது லிபர்டி பிலாசா சுற்றுலா விடுதியில் OVDC நிறுவனத்திற்கு ரூபா 09 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மதிப்பீட்டின் பிரகாரம், அது ரூபா 12.9 மில்லியனாக காணப்பட்டதுடன், அதிகாரசபையின் தலைவரால் நியமிக்கப்பட்ட விலைக்குழுவின் பிராகரம் அது ரூபா 11.52 மில்லியனாக காணப்பட்டதுடன், இந்த விலைகளுக்காக அதிகாரசபையின் விலைக்குழுவின் அங்கீகாரமின்றி இந்த கம்பனியால் | அதற்காக மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ள முன்னாள் பணிப்பாளர் சபை தீர்மானித்திராததுடன், விற்பனை மதிப்பீடானது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மதிப்பீட்டாளரான திரு. டபிள்யூ.ஏ.டீ. சரத் குமார அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அது ரூபா 12,900,000/- ஆகும். குறித்த வளாகத்தின பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 2,500,000/- தொகை ஓ.வீ.டீ.சீ. நிறுவனம் மேற்கொண்டதாக | அதிகாரசபையினால் சொத்துக்களை அகற்றுதல் வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 2.52 மில்லியன் கழிக்கப்பட்டு மேற்படி பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இந்த பழுதுபார்த்தல் செலவினம் தொடர்பான எந்தவொரு சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட பின்னர் அந்த தொகை கழிக்கப்பட்டு ரூபா 10,400,000/- ஆக விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் குறித்த சொத்தினை அகற்றுவதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்ஹ அவர்களால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்ததுரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 சனவரி 04ஆந் திகதிய DMS/1522/V-1 ஆம் இலக்க மற்றும் 2019 சனவரி 29ஆந் திகதி DMS/1522/V-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு முறையே நிரந்தர மற்றும் ஒப்பந் பதவிகளில் 2,164, மற்றும் 1,486 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி நிரந்தர அடிப்படையில 1,675 மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 313 மற்றும் நாளாந்த அடிப்படையில் 73 பேர் காணப்பட்டனர் அவ்வாறான போதிலும் ஒவ்வொரு பதவிகள் தொடர்பிலும் ஆராய்ந்து பார்க்கும் போது 05 பதவிகளின் 96 வெற்றிடங்களும், 07 பதவிகளின் 515 | கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டங்களை விட கீழ் முகாமைத்துவ மட்டங்களில் காணப்படும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணி காணப்படுகின்றமையால் புதிய ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். | மனிதவள முகாமைத்துவம் முறைமைப்படுத்தப்பட வேண்டியதுடன், தேவையான எண்ணிக்கையான ஊழியர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். |

மிகையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வறே மேற்படி கடிதங்களில் அங்கீகாரத்தினை பெற்ற பதவிகள் மற்றும் சேறு பதவிகளை நிர்மாணித்து ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்த போதிலும், அதிகாரசபையால் அந்த பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைப்பு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் ஒப்பந் அடிப்படையிலான பதவியணி 1,486 ஆன போதிலும், 1,685 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த துடன், அதிகாரசபையினால் அவர்களுக்கு ரூபா 608.71 மில்லியன் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.